This article is published under the Creative Commons CC-BY-ND License (http://creativecommons.org/licenses/

# Devaradiyar of Thirukoneswaram: A Socio-Historical Study based on Konesar Kalvettu

## திருக்கோணேச்சரத்தின் தேவரடியார்கள்: கோணேசர் கல்வெட்டை அடிப்படையாகக் கொண்ட சமூக வரலாற்று ஆய்வு

**V.Vimalathithan**

*Department of Tamil, University of Peradeniya, Sri Lanka.*

*Correspondence: v.vimalathithan@gmail.com*

*Submitted: July 14, 2022; Revised: December 28, 2022; Accepted: January 05, 2023*

**Abstract:** This study examines the origin of the *Dancing girls* (*Devaradiyar*) tradition which promoted artistic service, especially focusing on the art of dance, existed in Trincomalee (*Thirukoneswaram*), one of the oldest temples in Sri Lanka. The Devaradiyar tradition which existed in Tamil Nadu attained eminence during the Chola rule. Kulakottan or Cholagangan who ruled the Trincomalee region in Sri Lanka, as the representatives of the Cholas, brought various communities from Tamil Nadu. They were settled in the Trincomalee to serve in the Thirukoneswaram temple. Devaradiyar lineage is one of the communities that migrated from Tamil Nadu to Sri Lanka for rendering service to Thirukoneswaram. However, adequate studies have not been conducted regarding the Devaradiyar who were settled in Trincomalee. The main objective of this study is to describe the data related to Devaradiyar, extracted from the Konesar Kalvettu, literature that reveals information about the systems and orders of the Thirukoneswara temple. This study raises questions pertaining to the kinds of services rendered by Devaradiyar settlers to the temple, the regulations related to them during that period and attempts to find explanation for these issues. The primary data consist of verses and prose taken from Konesar Kalvettu. The secondary data include collections of research documentation linked to the political, social, and religious history of Trincomalee and information related to the Devaradiyar community.

**Key Words:** Devaradiyar**,** Hindu tradition, Manickam, Stone inscription, Temple tradition, Trincomalee.

**ஆய்வுச் சுருக்கம்:** இலங்கையின் தொன்மையான ஆலயங்களில் ஒன்றான திருக்கோணேச்சரத்தில் நிலவியதும் ஆடற்கலையை முன்னிறுத்திய கலைச்சேவையை முன்னெடுத்ததுமான தேவரடியார் மரபானது, அவ்வாலயத்தில் தோற்றம்பெற்ற விதம் குறித்து இக்கற்கை ஆராய்கின்றது. தமிழகத்தில் நிலவிவந்த தேவரடியார் முறைமை சோழர் ஆட்சிக்காலத்திலேயே தனது உன்னத நிலையை எய்தியிருந்தது. இலங்கையின் திருகோணமலைப் பிராந்தியத்தை சோழர்களின் பிரதிநிதியாக ஆட்சிசெய்த குளக்கோட்டன் அல்லது சோழகங்கனால், திருக்கோணேச்சர ஆலயத்தில் பணி செய்வதற்காக பல்வேறு சமூகத்தினர் தமிழகத்திலிருந்து அழைத்துவரப்பட்டு, ஈழத்தின் கிழக்கே திருகோணமலையில் குடியேற்றப்பட்டனர். திருக்கோணேச்சரத்தின் சேவைக்காக தமிழகத்திலிருந்து இலங்கைக்குப் புலம்பெயர்ந்த சமூகங்களுள் தேவரடியார் குடியும் ஒன்றாகும். திருக்கோணேச்சர ஆலயத்தின் முறைமைகள் - ஒழுங்குமுறைகள் குறித்த தகவல்களை வெளிப்படுத்தும் இலக்கியமான கோணேசர் கல்வெட்டிலிருந்து பகுத்து எடுக்கப்பட்டதும் தேவரடியார் தொடர்பானதுமான தரவுகளை விபரிப்பதுடன், அவற்றை விளக்குவதும் இக்கற்கையின் நோக்கமாகின்றது. குடியேற்றப்பட்ட தேவரடியார்கள் அக் கோயிலுக்கு எவ்வகையான பணிகளை ஆற்றினார்கள், அவர்கள் தொடர்பிலான ஒழுங்குமுறைகள் அக்காலத்தில் எவ்வாறு அமைந்திருந்தன முதலான கேள்விகளை இக்கற்கை எழுப்புவதுடன் அவற்றுக்கு விளக்கம் காணவும் முயற்சிக்கின்றது. பிரதான தரவுமூலமாக கோணேசர் கல்வெட்டை மட்டும் பயன்படுத்துவது இதன் ஆய்வெல்லையாக அமைகின்றது. பகுப்பாய்வு, விபரணம், விளக்கம் ஆகிய ஆய்வுமுறைகள் இக்கற்கையின் இலக்கை அடைவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** தேவரடியார், இந்துப் பாரம்பரியம், மாணிக்கம், கோணேசர் கல்வெட்டு, கோயிற்பண்பாடு, திருகோணமலை,

### 1.0 ஆய்வுப் பின்னணியும் அறிமுகமும்

தென்னிந்தியச் சைவ மரபில் பாடல்பெற்ற தலங்கள் முக்கியத்துவம் பெற்றவை. இலங்கையில் உள்ள பாடல்பெற்ற தலங்களில் ஒன்றான திருக்கோணேச்சர ஆலயம் அமைந்துள்ள பிராந்தியம் பண்டுதொட்டு பூகோள கேந்திர அமைவில் தனித்துவம் கொண்டது.

இதன் காரணமாக, வரலாற்றில் பல அரசியல் மாற்றங்களும் அதன் வழியாக பிராந்திய சமூகத்தளத்தில் பல மாற்றங்களும் திருகோணமலையில் நிகழ்ந்தன. இலங்கையின் பல பாகங்கள் சோழர்களது ஆட்சியின் கீழ் உள்ளடக்கப்பட்ட காலத்திலும் அதற்குப் பின்னரும் திருகோணமலை முக்கியமான பகுதியாகக் கருதப்பட்டது. சோழர்களது அரசப் பிரதிநிதிகளால் ஆளப்பட்ட திருகோணமலையில், தமிழகத்திலிருந்து வந்து குடியேறிய சமூகங்கள் குறித்த விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப் படாமை காரணமாக ஆய்வு இடைவெளி அடையாளங் காணப்பட்டுள்ளது.

### 1.1 ஆய்வின் நோக்கம்

திருகோணமலையில் சோழர்காலத்தில் குடியேற்றப்பட்ட சமூகங்களில் ஒன்றான தேவரடியார்கள் காணப்படுகின்றனர். தமிழகத்தில் நிலவிவந்த தேவரடியார் முறைமை சோழர் ஆட்சிக்காலத்திலேயே தனது உன்னத நிலையை எய்தியிருந்தது. அவர்கள் திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்ட விதம் அதன் பின்னணி, வந்த தேவரடியார்களுக்கான பணிகள், அவர்களுடைய வாழ்வாதாரத்துக்கான ஏற்பாடு, தேவரடியார் தொடர்பிலான கோயில் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றைக் கண்டறிதலை இக் கற்கை தனது நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 1.2.ஆய்வின் அடிப்படை மூலங்கள்

இக்கற்கைக்கான முதன்மைச் சான்றாதாரங்களாக கோணேசர் கல்வெட்டின் செய்யுட்பாகமும் உரைநடைப்பாகமும் அமைகின்றன. துணைச் சான்றாதாரங்களாக திருகோணமலையின் அரசியல், சமூக, சமய வரலாறு தொடர்பானவையும் தேவரடியார் சமூகம் தொடர்பானவையுமான ஆய்வு ஆவணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பிரதான தரவுமூலமாக கோணேசர் கல்வெட்டை மட்டும் பயன்படுத்துவது இக்கற்கையின் ஆய்வெல்லையாக அமைகின்றது.

### 1.3.தேவரடியார் முறைமை

தமிழ்ச் சமூகத்தில் கோயில்கள் நிறுவப்பட்ட காலம் தொட்டு ஆரம்பித்து நிலவிவந்த தேவரடியார் அல்லது தேவதாசி முறைமையானது, 1947 ஆம் ஆண்டு சட்டரீதியாக நிறுத்தப்பட்டது[1]. சங்க காலத்தில் கலை வல்லுநர்களாக இருந்த பெண்கள், பக்தி யுகத்தின் ஆரம்பத்தில் கோயில்களுடன் இணைந்துகொண்டனர். கோயிலின் இயக்கத்தினையும் நோக்கத்தினையும் முன்னகர்த்தும் பணிகளைச் செய்துவந்த கோவிற்சமூகங்களில் ஒன்றாக அவர்கள் தம்மை ஆக்கிக் கொண்டனர். அந்தக் கலைமகளிரின் அடிப்படைத் தேவைகள் உள்ளிட்ட தேவைகளை கோயில்களே நிறைவேற்றியதுடன், அவை அவர்களை போஷிக்கவும் செய்தன. கோயில் மூலவரான தெய்வத்துக்கு அடிமைப்பணி பூண்டொழுகுபவர் என்ற பொருள்படும்படியாக அந்த மகளிர்களுக்கு 'தேவரடியார்' என்ற பெயர் வழங்கப்படலாயிற்று. இந்தப் பெயர் தவிர, கணிகையர், பதியிலார், தளியிலார், தளிச்சேரிப் பெண்டுகள், ரிஷபத் தளியிலார், மாணிக்கம் முதலான பெயர்களும் தேவரடியார்களுக்கு தமிழகத்தில் வழங்கப்பட்டன. நக்கன் என்ற முன்னொட்டுடனும் தேவரடியார்கள் அழைக்கப்பட்டனர்.

'நக்கன்' என்ற சொல் திருஞானசம்பந்தராலும் திருநாவுக்கரசராலும் சிவபெருமானைக் குறிக்க பயன்படுத்தப்பட்டாலும், பின்னாளில், இது பொதுப்பெயராக பலருக்கும் வழங்கி வந்ததுடன் தேவரடியார்களது பெயர்களின் முன்னொட்டாகவும் இடம்பெற ஆரம்பித்தது. தேவரடியார்கள் தந்தையின் பெயரை உரிமைகொள்ள முடியாத சூழல் இருந்தமை காரணமாக சிவனையே அவர்களின் தந்தையாகக் கருதும் வழக்கம் இருந்திருக்கக்கூடுமெனத் தெரியவருகின்றது. திருமால் ஆலயத்தைச் சேர்ந்த தேவரடியார்கள் 'எம்பெருமானடியார்' என்ற பெயரில் அழைக்கப்பட்டனர். விஜயநகரப் பேரரசின் காலத்திலேயே, மேற்குறித்த பெயர்கள் அனைத்தும் வழக்கொழிந்து போய் 'தேவதாசிகள்' என்ற பெயர் நிலைபெற்றது. கேரளப் பிராந்தியத்தில் தேவிடிக்கள், நங்கைமார், குடிக்காரிகள், முறைக்காரிகள் எனவும், கர்நாடகப் பிராந்தியத்தில் பொட்டி, ஜோக்தி எனவும் ஆந்திரப் பிராந்தியத்தில் ஸானிகள் எனவும் ஒரிஸ்ஸா பிராந்தியத்தில் பாத்ராக்கள் மற்றும் மாகாரிகள் எனவும் அஸ்ஸாம் பகுதியில் குர்மபுக்கள், குடிபுக்கள் எனவும் தேவரடியார்கள் அழைக்கப்பட்டனர்.[1]

இந்துமதப் பண்பாட்டில் மாத்திரமன்றி பௌத்தம், சமணம் ஆகிய மதங்களின் பண்பாட்டுத் தளங்களிலும் தேவதாசிகளைப் போன்ற பெண்சேவையாளர் முறைமை நிலவியது. இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் காணப்பட்ட 4000 பௌத்த ஆலயங்களில் இருபதாயிரத்துக்கும் அதிகமான பெண் சேவையாளர்கள் இருந்துள்ளதாக ஷா-யு-கவா என்ற சீன யாத்திரிகரின் குறிப்பு தெரிவிக்கின்றது. கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாமென கருதப்படும் கர்நாடகப் பிராந்தியக் கல்வெட்டு ஒன்றில் ஜைன ஆலயத்தில் பணிசெய்த பாத்ரா பெண் குறித்த தகவல் காணப்படுவதும் கி.பி. 866 ஆம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த செப்புப் பட்டயத்தில் கன்னியாகுமரி - பார்த்திபசேகரபுரம் கோயிலுக்கு இலவச உழைப்பு

வழங்கியவர்களான வெள்ளாட்டிகள் தொடர்பான தகவல் வெளிப்படுவதும் இந்தியாவின் பல பகுதிகளிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வந்தமையைக் காண்பிக்கின்றன.[3]

இந்த தேவரடியார் அமைப்பு முறை அரசர்களிடமிருந்து மதகுருக்களால் உள்வாங்கப்பட்டதென்ற கருத்து ஆய்வுலகில் நிலவுகின்றது. அரசர்களின் களிப்புக்காகவும் பவனிகளின் கம்பீரத்தை மேலும் அதிகரிப்பதற்கும் கலைஞர்களின் செயற்பாடுகள் பயன்பட்டிருந்ததைப் போல, கோயில்களிலும் தெய்வ வடிவங்களின் முன்பாக பாடல் இசைத்தல், நடனமிடல், சடங்குகளிலும் உற்சவங்களிலும் பங்கு கொள்ளல் ஆகிய பணிகளை ஆற்றுவதற்காக தேவரடியார்கள் பயன்படுத்தப்பட்டனர். அரசர்களுக்களிக்கப்பட்டு வந்த மரியாதைச் சடங்குகள் கோயிலில் பிரதிபலிக்கப்பட ஆரம்பித்த காலத்திலேயே, தேவரடியார் முறைமையின் தோற்றமும் நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு.

தமிழகத்தில் கோயிற் பண்பாட்டுடனேயே தேவரடியார் முறைமை வளர்ச்சியுற்ற போதும், அதன் முன்னோடிநிலை சங்ககாலத்திலேயே புலப்படுகின்றது. இதற்கு அடுத்த கட்டமாக, தேவரடியார் மரபின் முன்னோடி நிலையை சிலப்பதிகார காலத்தில் காணலாம். சிலப்பதிகாரத்தில் மிக முக்கியத்துவமுடைய கதாபாத்திரமான மாதவி, பிற்காலத்தில் உருப்பெற்ற தேவரடியார் முறைமையின் முன்னோடி நிலைக்குரிய பிரதிபலிப்பாவாள். ஒரே காலத்திற்கு உரியனவான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தேவரடியார்களின் முன்னேடி நிலைக்குழுவினர்க்கு உரிய வரைவுச்சித்திரத்தை சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. இவற்றில் 'கடவுட் கணிகை' என்ற வகைப்பாடானது, கலைமகளிரை 'கடவுளுக்கான கலைவெளிப்பாடு' என்ற எண்ணக்கருவுடன் பிணைக்கின்றது. கலைமகளிர் பின்னாளில் தேவரடியார்களெனும் பரிணாமப் பாதையில், ‘கடவுட் கணிகை’ வகைப்பாடுடன் குறிப்பிடத்தக்க அளவில் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. கடவுளுக்கான புனிதச் சேவையை கலைமகளிர் மூலம் வழங்கும் மரபானது, சிலப்பதிகாரம் - மணிமேகலை எழுந்த காலத்திலேயே நடைமுறையில் இருந்தமை இதன்மூலம் தெளிவாகின்றது.

பல்லவர் காலத்தில் வளர்ச்சி பெற்று வந்ததும், நிறுவனமயமாக்கப்பட்டதுமான கோயிற்பண்பாடு ஆனது, பிற்காலச் சோழர் காலத்தில் தனது உன்னத நிலையை எய்தியிருந்தது. அதைப் போலவே, கோயிலால் ஆதரிக்கப்பட்டு வந்த தேவரடியார் சமூகமும் அக்காலப் பகுதியிலேயே, தனது பொற்காலத்தைக் கண்டது. பிற்காலச் சோழர்களின் அரசானது தமிழகத்தின் புவியியல் எல்லைகளைத் தாண்டியும் கடல் கடந்தும் விரிவடைந்தது. அவர்களின் ஆளுகையின் கீழ் வந்த தேசங்களிலிருந்து கிடைத்த பாரியளவிலான செல்வமானது, கோயில்கள் உள்ளிட்ட ஏராளமான கட்டுமானங்களை உருவாக்குவதற்குப் பயன்பட்டது. இந்த வகையில், தென்னிந்தியா முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆலயங்களை சோழர்கள் நிறுவினர். இந்த ஆலயங்களில் எண்ணற்ற சடங்குகளும் விழாக்களும் முறையாக நியமம் தவறாது நிகழ்த்தப்பட்டு வந்தன.

பிற்காலச் சோழர்காலத்தில், கோயில் அருகே இருந்த குடியிருப்புகளில் கோயிற்பணியாளர்கள் குடியமர்த்தப்பட்டனர். அந்த குடியிருப்பு தளிச்சேரி என அழைக்கப்பட்டது. அங்கு வாழ்ந்த தேவரடியார்களுக்கு ‘தளிச்சேரிப் பெண்டுகள்’ என்ற பெயரும் வழங்கலாயிற்று. இந்த தளிச்சேரிகள் கோயில்களைச் சார்ந்து பல ஊர்களிலும் நிலை பெற்றிருந்தன. தஞ்சை இராஜராஜேஸ்வரம் கோயில் கல்வெட்டுச் சாசனமானது 102 தளிச்சேரிகள் தொடர்பான தகவலை அளிக்கின்றது. இவற்றுள் கோயிலைச் சார்ந்து ஐம்பத்தைந்து தளிச்சேரிகள் அமைந்திருந்ததுடன் ஏனையவை ஊர்களைச் சார்ந்தும் இருந்தன. இந்த தளிச்சேரிகளில் இருந்து 400 தேவரடியார்கள் தஞ்சை இராஜராஜேஸ்வரம் கோயிலுக்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டு, அவ்வாலயத்திற்கு அருகில் குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறாக, இராஜராஜேஸ்வரம் கோயிலுக்கு கொண்டுவரப்பட்ட தேவரடியார்களைக் குடியமர்த்துவதில் ஒரு விருப்பத்தெரிவு முறை பின்பற்றப்பட்டுள்ளது. திருவையாறு, திருவாரூர், நாகைப்பட்டினம் ஆகிய இடங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பெண்களுக்கே குடியிருப்பு வரிசைகளில் முதல் வீடுகளும் அதற்கடுத்த வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன.

தேவரடியார் முறைமையானது சோழர்காலத்திலேயே பிறநாடுகளுக்கு பெரிதும் பரவியது. அக்காலத்தில் சோழ அரசானது தனது நாட்டின் புவியியல் எல்லையைத் தாண்டி பல திசைகளிலும் பரவியிருந்தமையால், அதன் பண்பாட்டுக்கூறுகள் பலவும் பிற நாடுகளுக்கு கடத்தப்பட்டிருக்கலாம். கர்நாடகப் பிராந்தியத்தில் உள்ள கோலார் பகுதியில் கண்டெடுக்கப்பட்டதும் முதலாம் இராஜேந்திரன் பொறிப்பித்ததுமான சாசனத்தில், கோலாரிலிருந்த துர்க்கை கோயிலுக்கும் இந்த தேவரடியார் முறைமை பரவியிருந்தமையை அறிய முடிகின்றது. இந்தக்

கோயிலில் 24 தேவரடியார்களின் சேவை பெறப்பட்டிருந்தது. தேவரடியார் முறைமையானது இந்தியாவின் கிழக்குப் பாகமான ஒரிஸ்ஸாவில் பெரிதும் பரவிக்கிடந்ததன் பின்னணியில், சோழர்களின் படையெடுப்புகளே காரணம் என்று கூறப்படுகின்றது.

ஆலயங்களின் விரிவாக்கம், புதிய ஆலயங்களின் தோற்றம் ஆகிய காரணங்களால், அவற்றைப் பராமரிப்பதற்கும் அங்கு சேவையாற்றுவதற்கும் அதிகளவில் தேவரடியார்கள் தேவைப்பட்டனர். இதனால் தேவரடியார் முறைமைக்குள் வெளியிலிருந்து நுழைக்கப்படும் பெண்களின் சமர்ப்பணங்களும் அதிகரித்தன. இந்தச் சமர்ப்பணங்கள் தன்னார்வ நிலையிலும் தன்னார்வம் அற்ற நிலையிலும் இடம்பெற்றன. தேவரடியார் முறைமைக்கு தன்னார்வமாக தன்னைச் சமர்ப்பிக்கின்ற பெண்ணின் பின்னணியில் பிற அம்சங்களை விடவும் மதம் சார்ந்த நோக்கமே அதிகளவில் இருந்தது. தன்னார்வமற்ற சமர்ப்பணத்தில் பொருளாதார அம்சங்கள் அதிகளவில் மேலாதிக்கம் செலுத்தியிருக்கலாமெனக் கூறப்படுகின்றது. மேலும், இவ்வகையான தன்னார்வமற்ற சமர்ப்பணங்கள் சோழர்காலத்தில் அடிமை முறைமை பன்மடங்காகப் பெருகுவதிலேயே போய் முடிந்தது எனக் கூறப்படுகின்றது.

கோயில்களுக்கு தேவரடியார் ஆகும் பொருட்டு பெண்கள் தானமாகவும் அளிக்கப்பட்டனர். முதலாம் குலோத்துங்க சோழன் காலத்தைச் சேர்ந்த சாசனம் ஒன்று சோழர் படைத்தளபதி ஒருவன் தனது குடும்பத்துப் பெண்களை தேவரடியாராக கோயிலுக்குத் தானம் அளித்ததைக் கூறுகின்றது. கொங்குச் சோழ அரசன் விக்கிரமனின் 27 ஆவது ஆண்டைச்சேர்ந்த ஆவணமொன்று ஒரு கோயிலுக்கு பெண்கள் நியமிக்கப்பட்டதாக கூறுகின்றது. சமகாலத்தில் சாளுக்கிய நாடு மற்றும் ஒரிஸ்ஸா பிராந்தியம் ஆகிய பகுதிகளிலும் பெண்களை கோயிலுக்கு நியமனம் செய்யும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. சமர்ப்பணம், தானம், நியமனம், இடமாற்றம் ஆகிய செயற்பாடுகள் மூலம் பிற்காலச் சோழர் காலத்தில் தேவரடியார் முறைமையானது தன்னை நிலைநிறுத்தி விரிவடைந்தது.

பாடல்கள் இசைப்பதும் நடனம் ஆடுவதுமே தேவதாசிகளின் பொதுவான கடமைகளாக இருந்தன. இவை தவிரவும் பூக்களைக் கொய்து சேகரித்தல்,அவற்றை மாலைகளாகத் தொடுத்தல், பெருக்குதல், ஆலய வளாகத்தை பசுமாட்டின் சாணத்தினால் மெழுகித் துப்பரவாக்குதல், மற்றும் திருப்பதிகங்களை ஓதுதல் ஆகியனவும் அவர்களது கடமைகளாக அமைந்தன. வேட்டைத்திருவிழாவின் போது பாடவும் ஆடவும் வேண்டுமென தேவரடியார்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்ததாக கி.பி. 1008 ஆம் ஆண்டைச்சேர்ந்த ஒரு சாசனத்தின் வழியாக அறியமுடிகின்றது. கோயிலுக்கான நந்தவனங்களைப் பராமரித்து வரவேண்டிய பொறுப்பும் அவர்கள் வசம் தரப்பட்டிருந்தது. கோயிலுக்குச் தேவைப்படுகின்ற அளவு நெய்யை விநியோகிப்பதற்கான உத்தரவாதம் அளிக்கும் பொறுப்பையும் பெற்றிருந்த தேவரடியார்கள் கோயில் திருவிழாக்களை நிகழ்த்துவதை மேற்பார்வை செய்யும் கடமையையும் ஆற்றினர்.[4]

பிற்காலச் சோழர்காலத்தில் தேவரடியார்கள் ஆற்றி வந்த சேவைக்கான ஊதியம் பல வகைகளில் வழங்கப்பட்டது. தேவரடியார்களுக்கு ஆதரவளித்த அரசர்களைப் பொறுத்தும் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டதெனத் தெரிய வருகின்றது. சில கோயில்களில் ஊதியத் தொகை குறைவாகவும் சில கோயில்களில் பெருந்தொகை ஊதியமும் வழங்கப்பட்டது. தேவரடியார்களுக்கான இந்த ஊதியமானது பணமாகவும் பொருளாகவும் வழங்கப்பட்டு வந்தது. சமைக்கப்பட்ட சோற்று உருண்டைகள், நெல், துணிமணிகள், நிலங்கள் மற்றும் பிற பொருட்களும் கூட ஊதியமாக வழங்கப்பட்டன. தேவரடியார்கள் தமக்கான ஆடைகளை வாங்கிக் கொள்வதற்கும் சில்லறைச் செலவீனங்களுக்குமாக குறிப்பிடத்தக்க அளவு ஊதியம் பணமாக அளிக்கப்பட்டது.[5]

தேவரடியார்களுக்கும் அவர்களுடைய நடன ஆசிரியர்களுக்கும் அளிக்கப்பட்ட மானியங்களும் ஊதியங்களும், காணி, ஜீவிதம், போகம் முதலான பெயர்களில் பலவகையாக அழைக்கப்பட்டுள்ளன. தமிழக்கூத்தை ஆற்றிய நடனக்கலைஞருக்கு வழங்கப்பட்ட காணி 'கூத்தக்காணி' என்று அழைக்கப்பட்டது. ஆரியக்கூத்து ஆடியவருக்கு அளிக்கப்பட்ட காணி 'நிருத்தியபோகம்' எனச் சுட்டப்பட்டதுடன் அதே காணி 'சாக்கைக்காணி' எனவும் அழைக்கப்பட்டது. அதே காலத்தில் ஆந்திரப்பிராந்தியத்தில் தேவரடியார்களுக்கு அவர்களின் உயிர்வாழும் காலம் வரை வழங்கப்பட்டு வந்த ஊதியத்துக்கு 'ஜீவனம்' அல்லது 'ஜீவிதம்' அல்லது 'சன்மானம்' என்பதான பெயர்கள் அளிக்கப்பட்டன. நடன ஆசிரியரான நட்டுவனாருக்கு வழங்கப்பட்ட ஊதியமானது 'நட்டுவக்காணி' அல்லது 'நட்டுவனிலை' என அழைக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.[5,6]

சோழர்களின் காலத்தில், பொருளாதாரத்தில் வலுவான நிலையைக் கொண்டிருந்த மேல் தட்டு உயர்நிலைத் தேவரடியார்கள், மதிப்புயர்ந்த கௌரவமான கடமைகளை ஆற்றி, பணம், பொருள், நிலம், கௌரவங்கள், சிறப்புரிமைகள் முதலானவற்றை மானியங்களாகப் பெற்று அனுபவித்தனர். அதே காலப்பகுதியில் கீழ் தட்டினரான சாதாரண தேவரடியார்கள் சிறு பணிகளை மேற்கொண்டும் பற்றாக்குறையான தினசரி ஊதியப் படிகளை மட்டுமே பெற்றுக்கொண்டுமிருந்தனர். இவை அனைத்தின் விளைவாக, பிற்காலச் சோழர்களின் இறுதிக்காலப் பகுதியில், தேவரடியார் சமூகத்திற்குள் ஏற்றத்தாழ்வுடைய அதிகாரத்துவ மேலாதிக்கம் உருவாகி உயர்ந்தெழுந்திருந்தது.[8,9]

### 1.4. கோணேசர் கல்வெட்டு

திருக்கோணேச்சரத்தின் வரலாறு, கோயில் ஒழுங்குமுறைகள், பணியாளர்களின் சேவைகள் தொடர்பான பல தரவுகளை தன்னகத்தே கொண்ட தனித்துவமான நூலாக கோணேசர் கல்வெட்டு அமைந்துள்ளது.[7] திருகோணமலைப் பிராந்தியத்தில் வாழ்ந்த கவிராஜவரோதயரால் இந்நூல் 16 ஆம் நூற்றாண்டு அளவில் எழுதப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது. இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 1993 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கோணேசர் கல்வெட்டு நூலுக்கான ஆய்வுரையில் சி. பத்மநாதன் இந்நூல் குறித்து பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

> *"இலங்கையிலே, தமிழ் மொழியிலே எழுதப்பெற்றுள்ள வரலாற்றுச் சார்புடைய நூல்களிலே கோணேசர் கல்வெட்டு தனித்துவமானது. பல ஆதாரபூர்வமான வரலாற்றுச் செய்திகள் அதிலே அடங்கியுள்ளன. திருகோணமலைப் பிராந்தியத்திலுள்ள சாசன வழக்காறுகளையும் அவற்றின் பொருள் மரபினையும் அடிப்படையாகக் கொண்டு உருவாகிய ஒரு தொடர்ச்சியான இலக்கிய மரபினைப் பிரதிபலிக்கின்ற நூலாகவே கோணேசர் கல்வெட்டு அமைந்துள்ளது."*

> *"கல்வெட்டு என்ற வகையான இலக்கியங்களைப் பற்றிய விளக்கங்களை தமிழிலகண நூல்களில் எதிர்பார்க்க முடியாது. சிலவகை இலக்கியங்களை கல்வெட்டு என வர்ணிக்கும் மரபு இலங்கையில் தோன்றுவதற்கு முன்பு, தமிழ் மொழியிலுள்ள பிரதான இலக்கண நூல்கள் தோன்றிவிட்டன. ஆயினும் கல்வெட்டுக்களில் மட்டுமிருந்தனவான மெய்க்கீர்த்தி வடிவங்களைப் பற்றி பன்னிருபாட்டியல் முதலான நூல்கள் வர்ணிக்கின்றமையுங் குறிப்பிடத்தக்கது. முற்காலத்திலே மன்னர்களதும் பிரதானிகளதும் புகழைக் கூறும் மெய்க் கீர்த்திகளின் வாசகங்களைச் சிலா சாசனங்களாக அமைத்தார்கள். சிலா சாசனங்களிலுள்ள மெய்க்கீர்த்திகளை உதாரணமாகக் கொண்டு பெரியோரின் புகழினைக் கூறிய பாடல்களைக் கல்வெட்டு எனக் குறிப்பிடும் வழக்கம் இலங்கைத் தமிழரிடையே தோன்றி நிலைபெற்று வருகிறதென்று கொள்ள முடிகின்றது. சாசன வாசகங்களை அடிப்படையாகக் கொண்டெழுந்த இலக்கியங்களையும் கல்வெட்டு எனக் குறிப்பிடும் வழக்கம் இலங்கையில் ஏற்பட்டிருந்தமைக்கு கோணேசர் கல்வெட்டு என்னும் நூல் ஓர் எடுத்துக் காட்டாகும்." [1]*

> *" கோணேஸ்வரம் பற்றியவையும் திருகோணமலையிலே காணப்பட்டனவுமான சாசனங்கள் பலவும், கோணேசர் கல்வெட்டு பிரதிபலிக்கின்ற இலக்கியமரபு விருத்தி பெறுவதற்கு ஏதுவாகவிருந்தன என்று கொள்வதற்கு கோணேசர் கல்வெட்டு, கைலாச புராணம், திரிகோணமலைப் புராணம் என்பவற்றிலுள்ள குறிப்புகள் ஆதாரமாயுள்ளன." [2]*

> *"கோணேசர் கோயில் பற்றிய ஏற்பாடுகளும் சேவைகளும் நிலைகுலைந்திருந்த ஒரு காலத்திலே கோணேசர் கல்வெட்டு உருவாக்கப் பெற்றது என்று கருதலாம். மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப ஆலயசேவைகளைப் புதிதாக வரையறை செய்யவேண்டிய ஒரு காலத்திலே அது உருவாக்கப்பெற்றது என்று கொள்ள வேண்டும். திருகோணமலையிலிருந்த கோணேசர் கோயிலைப் போர்த்துக்கேயர் இடித்தழித்த பின்பு, கோயிலிலிருந்த ஆவணங்கள் பல அழிவுற்றன. எஞ்சியுள்ளவற்றை அக்கறையுள்ள சிலர் அங்குமிங்குமாக எடுத்துச் சென்றனர். தம்பலகாமத்திலே கோணேசர் கோயிலை புதிதாக அமைத்தபொழுது பழைய கோயிலுக்குரிய உடைமைகளும் சேவைகளும் புதிய கோயிலுக்கு உரியனவாகின. அவற்றைப் புதிதாக வரையறை செய்யவேண்டிய தேவையின் நிமித்தமாகவே கோணேசர் கல்வெட்டு உருவாக்கப்பட்டிருத்தல் வேண்டும்." [3]*

> *"சென்றகாலத்து நிகழ்ச்சிகளையும் சமகால வழமைகளையும் அவற்றுக்கு அடிப்படையாகவிருந்த வரலாறுகளையும் தொகுத்துக் கூறும் நூலாகவே கோணேசர் கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது. குளக்கோட்டன் காலம் முதலாகவுள்ள கோணேசர் கோயிலின் வரலாற்றம்சங்கள் சிலவற்றையும் ஆலயசேவைகள் பற்றிய விபரங்களையும் அது வர்ணிக்கின்றது. தானம், வரிப்பத்து, வன்னிபங்கள் முதலானோர் ஆலய சேவைகளுடன் தொடர்புற்றிருந்தமையால் சமுதாயப் பிரிவுகள் பற்றியும் அவற்றின் குடியேற்றங்கள் ஏற்பட்டமை*

*பற்றியும் கூறவேண்டிய தேவை அதனை உருவாக்கினோருக்கு ஏற்படலாயிற்று. கைலாசபுராணம் குளகோட்டன், கயவாகு மகாராசன் ஆகியோரின் திருப்பணிகளைப் பற்றி மட்டுமே கூறுகின்றது. ஆனால் கோணேசர் கல்வெட்டு திருகோணமலைப் பிராந்தியத்தில் நிலைகொண்டிருந்த இந்து சமுதாயத்தின் பிரதான பிரிவுகளைப் பற்றியும் வன்னிபங்களின் ஆட்சிபற்றியும் கோணேசர் கோயிலின் பல்வேறு அம்சங்களைப் பற்றியுங் கூறுகின்றது. சாசன வழக்காறுகளையும் பிற ஆவணங்களையும் பின்னணியாகக் கொண்டு சமுதாய வரலாற்றினைக் குறிப்பிடத்தக்க அளவிலே ஆதார பூர்வமாகக் கூறுகின்ற வேறெந்த நூலோ ஆவணங்களோ இலங்கையிலே தமிழ்மொழியில் எழுதப்படவில்லை.”* [4]

திருகோணமலைக்கு தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்த பல்வேறு சமூகங்கள் குறித்தும் அச்சமூகத்தவர்களால் திருக்கோணேச்சர ஆலயத்திற்கு ஆற்றப்பட்ட சேவைகள் குறித்தும் கோணேசர் கல்வெட்டு வெளிப்படுத்தும் பெரும்பாலான தரவுகள் முற்கால சாசனங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

## 2.0 தேவரடியார் குறித்து கோணேசர் கல்வெட்டு வெளிப்படுத்தும் தரவுகள்

தமிழகத்திலிருந்து குளக்கோட்ட மன்னனால் கொண்டுவரப்பட்ட குடிகளில் தேவரடியார் சமூகத்திற்கு ஒரு தனித்துவம் அளிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. குளக்கோட்டன் காலத்தில் திருக்கோணேச்சர ஆலயத்தில் பணிசெய்வதற்காக தமிழகத்திலிருந்து இரண்டு குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன. முதலாவது குடியேற்றம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:

*“..... குளகோட்டு ராசன் பங்குனி உத்திரம்*
*பதினைந்தாம் தேதி தன்னில்*
*வரிசையுடன் சென்று மருங்கூரிலேகி வளவரின்*
*நல்லோரை மரக்கலத்தில் ஏற்றி*
*அரியதிரி கோணமலை நாதற்கென்றே அன்னகரில்*
*ஐயாறு குடியும் ஏற்றி*
*உரிமையிது உங்கள் பரவணியாம் என்றே*
*உரைசெய்தான் சதுர்வேத ஞானமூர்த்தி”*
(செய்யுள் 5)

குளகோட்டன் பங்குனி மாதம் உத்தர நட்சத்திர தினத்தன்று தமிழகத்தின் மருங்கூர் என்றழைக்கப்பட்ட பிராந்தியத்திற்குச் சென்று முப்பது குடிகளைச் சேர்ந்த மக்களை மரக்கலத்தில் ஏற்றிவந்து குடியேற்றினான். அந்த முதலாவது குடியேற்றத்தினூடாக திருகோணமலைக்கு வந்து சேர்ந்த குடிகளுக்கு ‘தானத்தார்’ என்ற பெயர் வழங்கப்பட்டது. தானத்தார் வகைப்பாட்டுக்குள் வருகின்ற முப்பது குடிகளுள் தேவரடியார்களும் உள்ளடக்கப்பட்டனர்.முதலாவது குடியேற்றத்தின் ஊடாக திருகோணமலைக்கு வந்த தேவரடியார்களுக்கு வழங்கப்பட்ட பணிகளை பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது:

*“இத்தலத்தில் அரன் கயிலை ஆலயத்தில் இயன்ற அறைதனில் முதல் இருப்பு நாட்டி*

*நித்தம்வரும் வரவாகும் பொருள்களோடு நிதம் பூசைச் செலவெழுத நியமஞ்செய்து*

*அத்தர்முன்னர் ஆலாத்தி நடனமிடல் பன்றிகுற்றல் அதிகப்பட்ட அரனுக்கீதல்*

*இத்தனையும் தானத்தார் செய்வீரென்ன எழுகுடிக்கு இராயபட்டம் ஈந்தான் வேந்தன்”*

(செய்யுள் 6)

இதன்படி திருக்கோணேச்சரத்தின் மூலவரான சிவபெருமானுக்கு செய்யப்பட வேண்டிய பின்வரும் சடங்குகளைச் செய்தலும் தானத்தார் வகைப்பாட்டுக்கு உள் வந்த தேவரடியார்களுக்கு உரித்தாக்கப்பட்டன:

- சிவபெருமானுக்கு பட்டாடை அணிவித்தல்
- சிவபெருமான் திருமேனிக்கு முன்பாக ஆலாத்தி எடுத்தல்
- நடனமிடல்
- பன்றிகுற்றல்

திருக்கோணேச்சர ஆலயத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது குடியேற்றத்தினூடாக தான் கொணர்வித்த குடிகளும் ஆட்களும் கோயிலின் கருமங்களை ஆற்றி முடிப்பதற்குப் போதுமான எண்ணிக்கையில் இல்லை என உணர்ந்த குளக்கோட்டன், இரண்டாவது குடியேற்றத்தை முன்னெடுத்தமை குறித்து பின்வரும் பாடல் சுட்டுகின்றது:

[1]பத்மநாதன், சி., 1993, கோணேசர் கல்வெட்டு - சில ஆராய்ச்சிக் குறிப்புகள், கோணேசர் கல்வெட்டு, ப. 3
[2]பத்மநாதன், சி., 1993, கோணேசர் கல்வெட்டு - சில ஆராய்ச்சிக் குறிப்புகள், கோணேசர் கல்வெட்டு, ப. 4
[3]பத்மநாதன், சி., 1993, கோணேசர் கல்வெட்டு - சில ஆராய்ச்சிக் குறிப்புகள், கோணேசர் கல்வெட்டு, ப. 12
[4]பத்மநாதன், சி., 1993, கோணேசர் கல்வெட்டு - சில ஆராய்ச்சிக் குறிப்புகள், கோணேசர் கல்வெட்டு, ப. 13

*"வேந்தனின்னும் அரன் தொழும்புக்கு ஆட்போதாதென நினைந்து மீண்டே காரை*

*வாய்ந்த வளநாடு சென்று வரிப்பிடித்தான் மூவேழு குடிவாழ்வோரை*

*சேர்ந்து இடபமாதமதில் ஈரைந்தாம் தேதி திங்கள் சிறந்த சோதி*

*ஏய்ந்த கன்னி முகூர்த்தமதில் அரன் தொழும்பு செயவிடுத்தான் இராசராசன்"*

(செய்யுள் 7)

தமிழகத்தின் 'காரைக்கால்' என்றழைக்கப்பட்ட பிராந்தியத்திலிருந்து வந்தவர்களால் திருக்கோணேச்சரத்தில் இரண்டாவது குடியேற்றம் இடம்பெற்றது. இக்குடியேற்றத்தில் இருபத்தொரு குடிகளிலிருந்து ஆட்கள் அழைத்துவரப்பட்டனர். 'வரிப்பத்தார்' என்ற வகைப்பாட்டுக்குள் உள்ளடக்கப்பட்ட இவர்கள் வைகாசி மாதம் பத்தாம் நாள் வளர்பிறையுடன் கூடிய சுவாதி நட்சத்திர தினத்தில் திருக்கோணேச்சரத்தில் பணிக்கு அமர்த்தப்பட்டனர். முதலாவது குடியேற்றத்தினூடாக கொண்டுவரப்பட்ட தேவரடியார்களின் ஆடற்பணிகளுக்கு உதவும் வகையான வேலைகள், இந்த வரிப்பத்தார் குடிகளுள் சிலருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டமையை பின்வரும் செய்யுள்வரி உணர்த்துகின்றது.

*"செய்ய நடனஸ்திரிக்கு முட்டுவகை*
*கொட்டலொடு சிறக்கப்பாடல்*
*..... விளங்கச் செய்வீர் "*

(செய்யுள் 9)

தேவரடியார் ஆடும் போது வாத்தியங்களை இசைத்தலும் வாய்ப்பாட்டைப் பாடலும் இவர்களுக்கு உரிய பணிகளாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தேவரடியார்கள் உள்ளடங்குகின்ற தானத்தார் குழுமத்திற்கும் தேவரடியார்களுக்குத் துணைபுரியும் குடிகள் உள்ளடங்குகின்ற வரிப்பத்தார் குழுமத்திற்கும் இடையில் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் திருக்கோணேச்சரத்தில் இருந்தமையை பின்வரும் செய்யுள் மூலம் அறிய முடிகின்றது:

*"தானம் வரிப்பத்தென்னும் அரன் தொழும்பார்க்குள் இகலார் தர்க்கம் வந்தால்*
*மானபங்கமடையாமல் நடுத்தீர்ப்பதார் எனவே மதுரையூர் சென்று*
*ஆனமதிக் குலராமன் தனியுண்ணாப் பூபாலன் தனைக் கொணர்ந்து*
*தேனமர்பூந் தொடைமார்பன் திருக்கோணை நகரரசு செய்ய வைத்தான்."*

*(செய்யுள் 13)*

திருக்கோணேச்சரத்தில் பணியாற்றிய தானத்தாருக்கும் வரிப்பத்தாருக்கும் இடையில் வாக்குவாதங்கள் ஏற்படுமிடத்து ஏதேனும் ஒரு தரப்பினராவது மானபங்கம் அடைந்து மனம் கோணினால், கோயிலுக்கு அவர்கள் ஆற்றும் சேவையின் தரம் குன்றும். அதனால் அந்நிலை நேராமல், இருதரப்பினருக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு, ஒருவரை நியமிக்க வேண்டிய தேவை அந்நாளில் ஏற்பட்டுள்ளது.[10] இதன்பொருட்டு தமிழகத்தின் மதுரை நகருக்குச் சென்ற குளக்கோட்டன், ராமனை ஒத்த ஒழுக்கமுடையவன் என்ற சிறப்புடையவனும் சந்திர வம்சத்தைச் சேர்ந்தவனுமான தனியுண்ணாப் பூபாலன் என்பவனை அங்கிருந்து அழைத்து வந்தான்.[4] தனியுண்ணாப் பூபாலனுக்கு திருகோணமலை நகரை நிர்வாகம் செய்வதற்குமான நியமனமும் குளக்கோட்டனால் வழங்கப்பட்டது. தேவரடியார்கள் உள்ளடங்கிய இப்பணியாளர் குழாத்திற்கு வழங்கபட்ட தண்டனைகள் குறித்த தகவலை பின்வரும் செய்யுள் விளக்குகின்றது:

*"சுத்தமிகு வன்னிமையே குற்றஞ்செய்தால் துலங்கு விலங்கடி உயிருக்குயிரே வாங்கு*

*நிர்த்தமிடு மடவியர்கள் குற்றஞ்செய்தால் நிறைபுனலில் நிறுத்திவைத்துத் தேங்காய் வாங்கு*

*மற்றை மதிநுதல் மடவார் குற்றஞ் செய்தால் மண்கடகம் ஏற்றியடி வழக்கு நோக்கி*

*இத்தகைய இராசாங்கம் செய்நீ என்றே இரத்னமணி ஆசனத்தில் இருத்திவைத்தான்"*

(செய்யுள் 14)

நடனம் ஆடுகின்ற பெண்களான தேவரடியார்கள் குற்றச்செயலில் ஈடுபடுமிடத்து அவர்களுக்கு, நிறைந்த நீரில் நிற்க வைத்து 'தேங்காய் வாங்குதல்' என்றழைக்கப்பட்ட தண்டனை வழங்கப்பட்டுள்ளது. திருக்கோணேச்சரத்தில் பணிபுரிந்தவர்களும் தேவரடியார்கள் அல்லாதவர்களுமான பெண்கள் குற்றம் செய்யும் பொழுது, மண்கடகத்தை தலையில் ஏற்றி அவர்களுக்கு கசையடி வழங்கப்பட்டுள்ளது. கோயிற்பணியாளரான பெண்களை நிர்வாகம் செய்யக்கூடிய பதவியில் இருந்தோர் பின்பற்ற வேண்டிய ஒழுக்கநெறியை பின்வரும் செய்யுள்வரி சுட்டிக்காட்டுகின்றது:

"வையமகிழ் வன்னிமையே இன்னும் கேளாய் மனுநீதி தவறாதே கோபம் பாவம்
ஐயமற உன் தாரம் தாரமாகும். அயலவர்கள் தாரமெலாம் தாயாராகும்..."

(செய்யுள் 14)

தனியுண்ணாப் பூபாலனுக்கு குளக்கோட்டன் வழங்கிய அறிவுறுத்தலில் பிறன்மனை நயத்தலிலிருந்து விலகியிருக்க வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தனியுண்ணாப் பூபாலன் பிறர் மனைவியை விரும்பக்கூடாது எனவும் அவர்களை தமது தாய் போன்று கருத வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.[11]

திருக்கோணேச்சர ஆலய தேவரடியார்களது வாழ்வாதாரத்துக்கு கயவாகு மன்னனால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு முறைகளானவை, கோணேசர் கல்வெட்டின் உரைநடைப் பாகத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன:

- *“புவிபுகழ் பொன்னவராயன் கொடுத்தது நாகரத்தின மாணிக்கம்.தம்பிரானேற்றுக் கொண்டது.*
- *செகமது புகழுஞ் சிதம்பரராயன் கொடுத்தது நவரத்தின மாணிக்கம். இராசர் ஏற்றுக்கொண்டது.*
- *கருணைங்கடலான் காளிங்கராயன் கொடுத்தது கனகரத்தின மாணிக்கம். வன்னிமையேற்றுக் கொண்டது.*
- *மதப்புலியென்னும் மகாகொம்பராயன் கொடுத்தது. மரகதரத்தின மாணிக்கம். காராளரேற்றுக் கொண்டது.*
- *சித்தசனிகர்க்குந் தென்னவராயன் கொடுத்தது வயிரரத்தின மாணிக்கம்.மீகாமனேற்றுக்கொண்டது.*
- *திருவுறைமார்பன் செம்பகராயன் கொடுத்தது பளிங்குரத்தின மாணிக்கம். கம்மாளரேற்றுக்கொண்டது*

*இந்த மாணிக்கங்களையேற்றுக் கொண்டோர்கள் தங்கள் தங்கள் மாணிக்கங்களுக்கு ஆடையாபரணமுடைக்கிசைந்த பட்டுவகை குடிநிலம் விளைபுலம் மாடுகன்று ஆளடிமை கொடுத்து அரன்றொழும்பு செய்ய விடுவது.*

*எந்தெந்தக்காலத்தும் அந்தந்த வம்சத்து மனிதர் இப்படிச் செலவு கொடுத்து நடத்த வேண்டியது. இப்படிச் செலவு கொடுத்து நடத்தாதவர்கள் வறுமையினாலும் நோயினாலும் இராசநெருக்கத்தினாலும் திரவியமழிந்து வம்சமற்று நரகத்துக்குமேதுவார்களென்று அரசனாற் கூறப்பட்டது.”*

திருக்கோணேச்சர ஆலயத்தின் தேவரடியார்களது சேவை இடையறாது தொடர்வதற்கு, அவர்கள்தம் வாழ்வாதாரத்தினை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானதாக இருந்தது. பொருளாதார ரீதியான அனுசரணையை தேவரடியார்களுக்கு தொடர்ச்சியாக கிட்டச்செய்யும் வகையில், அக்கால சமுதாயத்தின் பொருளாதார வலுவுள்ள பிரமுகர்களால் அல்லது சமூகக்குழுக்களால் ஒவ்வொரு தேவரடியாரும் தனிப்பட ஆதரிக்கப்பட்டமை இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும். அநுராதபுரத்திலிருந்து அரசாண்ட கயவாகு மன்னனால் இந்த முறைமை ஏற்படுத்தப்பட்டது. அந்த வகையில் கயவாகு மன்னன் காலத்தில், கோயிலுக்கு தேவரடியார்களை வருவித்துக் கொடுத்தவர் பெயர்களும் தேவரடியார் பெயர்களும், அத் தேவரடியார்களைப் பொறுப்பேற்று ஆதரிக்க முன்வந்த நபர் அல்லது குடிகள் பெயர்களும் அட்டவணை 1 இலே பின்வருமாறு:

**அட்டவணை - 1**

| இல. | தேவரடியார் பெயர் | கொடுத்தவர் | பொறுப்பேற்ற நபர் / குடி |
|---|---|---|---|
| 1 | நாகரத்தின மாணிக்கம் | புவிபுகழ் பொன்னவராயன் | தம்பிரான் |
| 2 | நவரத்தின மாணிக்கம் | செகமது புகழுஞ் சிதம்பரராயன் | இராசர் |
| 3 | கனகரத்தின மாணிக்கம் | கருணைங்கடலான் காளிங்கராயன் | வன்னிமை |
| 4 | மரகதரத்தின மாணிக்கம் | மதப்புலியென்னும் மகாகொம்பராயன் | காராளர் |
| 5 | வயிரரத்தின மாணிக்கம் | சித்தசனிகர்க்குந் தென்னவராயன் | மீகாமன் |
| 6 | பளிங்குரத்தின மாணிக்கம் | திருவுறைமார்பன் செம்பகராயன் | கம்மாளர் |

அட்டவணை-1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவரடியார்களைப் பொறுப்பேற்றுக்கொண்ட நபர்கள், குடிகள் முதலானவர்கள், அவ்வத் தேவரடியார்கள் திருக்கோணேச்சரத்து சிவபெருமானுக்கு சேவை செய்வதற்காக பின்வரும் வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டிய கடப்பாட்டுக்கு ஆட்பட்டார்கள்:

- ஆடைகள்
- ஆபரணங்கள்
- மேற்குறிப்பிட்ட இரண்டுக்கும் பொருத்தமான பட்டுத்துணி மற்றும் ஆடைகள்
- குடியிருப்பதற்கான நிலம்
- உணவு உற்பத்தி செய்யக்கூடிய விளைநிலம்
- கன்றுடன் கூடிய கறவை மாடு
- வேலை செய்வதற்கான ஆட்கள்

குறித்த ஒரு தேவரடியாரைப் பொறுப்பேற்ற நபர் / குடிகள் தத்தம் காலத்துக்குப் பிறகும் தம் சந்ததியினரால் அத்தேவரடியாரும் அவர்களது சந்ததியினரும் ஆதரிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

கோயிலின் நிர்வாக அதிகாரம் கொண்ட முதன்மையானவர்களின் குடும்பத்தில் திருமணம்

நிகழுமிடத்து, தேவரடியார் உள்ளிட்ட பல பணியாளர்களுக்கும் வேலைகள் ஒதுக்கப்பட்டன. இது 'கலியாணத்துக்குச் செய்தொழும்பு' என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இதன்போது தேவரடியார்களின் பங்கு குறித்து, உரைநடைப் பாகத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

*"பொன்னவராயன் கிளையில் மனிதர் தம்பிரான் மாணிக்க முதன்மை நாயகிக்கு விதிமுறை தவறாமல் மஞ்சணீராட்டி யலங்காரஞ்செய்வது...."*

இதன்படி,முதன்மைகளின் குடும்பத் திருமணத்தின் மணப்பெண்ணுக்கு விதிமுறைகளைப் பின்பற்றி மஞ்சள் நீராட்டுவதுவும் அதன் பின்னர் அலங்காரம் செய்து விடுவதுவும் தேவரடியார் ஒருவரின் பணியாக இருந்துள்ளது. திருக்கோணேச்சரத்துத் தேவரடியாரின் வாழ்வாதாரத்தைப் பொறுப்பேற்ற நபர் அல்லது குடியின் பெயரால் அத்தேவரடியாரும் அவர்கள் சந்ததியினரும் அழைக்கப்படும் வழக்கம் அக்காலத்தில் இருந்தது. மேல் தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட புவிபுகழ் பொன்னவராயன் என்பவரால் கோயிலுக்கு வருவித்துக் கொடுக்கப்பட்டவரும் தம்பிரான் என்ற நபர் / குடியால் பொறுப்பேற்கப்பட்டவருமான நாகரத்தின மாணிக்கம் மற்றும் அவர்தம் சந்ததியில் வந்த தேவரடியார்களுக்கும் மட்டுமே இப்பணி ஒதுக்கப்பட்டுள்ளது.

*"....இவற்றுடனே நாயகியையும் முதன்மை நாயகனையும் கூட்டிவரத் தன்வரிசையலங்கிருதத்துடனே தம்பிரான் மாணிக்கம் முதன்மைநாயகிக்கு பக்கமாய் வருவது"*

*"மணப்பந்தரின் கீழே நாயகனும் நாயகியும் பலகையின் மீதே நிற்கத் தம்பிரான் மாணிக்கம் முன்னேவரப் பதினாறு முழப்பட்டு முதன்மை கொடுக்க மொட்டாக்கிடுவது."*

*"இராசமாணிக்கத்துக்கு முதன்மை நாயகி பதினாறு முழ வெள்ளைப் பட்டுக்கொடுக்க வாங்கி மொட்டாக்கிடுவது."*

*"முற்பாதைக்குத் தம்பிரான் மாணிக்கம் முன்னே நிற்பது. இராசமாணிக்கம் பின்னே நிற்கிறது. பிற்பாதைக்கு இராசமாணிக்கம் முன்னே நிற்கிறது. தம்பிரான் மாணிக்கம் பின்னே நிற்கிறது. இப்படி நிற்கக் கனகசபைப் பண்பாரத்தார் கிளையில் மனிதர் கண்ணூறாலாத்தி திட்டம் பண்ணிக் கொடுக்க, இரண்டு மாணிக்கமும் ஆலாத்தியெடுத்துக் கண்ணூறு கழிக்கக் கனகசபைப் பண்டாரத்தார் கிளையில் மனிதர் ஆலாத்தித் தட்டு வாங்குவது"*

*"அக்கினி சாட்சியாகத் திருமங்கலியந் தரித்து, அரசாணிவலமாக வந்து, அம்மி மிதித்து, அருந்ததி காண்பித்து, மணவறைக் கட்டிலிலே நாயகனும் நாயகியுமிருக்கத் தம்பிரான் மாணிக்கமுங் கனகசபை பண்டாரத்தார் கிளையிலொரு பெண்பிள்ளையுமாகிய இருவரும் கீழே தங்கள் வரிசைப் பிரதாபமுடனேயிருக்க வேண்டியது"*

இதன்படி, முதன்மை வீட்டுத் திருமணத்தில் மாப்பிள்ளையையும் மணப்பெண்ணையும் கூட்டிவரும் போது, மணப்பெண்ணுக்கு பக்கத்தில், தம்பிரான் மாணிக்கம் என்றழைக்கப்படும் தேவரடியார் தனக்குரிய அலங்காரங்களுடன் வர வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தம்பிரான் மாணிக்கத்துக்கும் இராச மாணிக்கத்திற்கும் பதினாறு முழப் பட்டுத்துணி அளித்தலும் அதனையடுத்து மொட்டாக்கிடும் சடங்கும் இடம்பெற்றுள்ளது. மணமகள் மணமேடைக்குச் செல்லும் போதும் வரும் போதும் முன்னும் பின்னும் நிற்றல் மட்டுமல்லாது, மணமக்களுக்கு ஆலாத்தி எடுக்கும் சடங்கிலும் தம்பிரான் மாணிக்கம், இராச மாணிக்கம் ஆகிய இரு தேவரடியார்களுக்கும் பொருத்தமான சம பங்கு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, தாலி கட்டல் முதலான சடங்குகள் முடிவடைந்ததன் பின்னர், மணவறையின் ஆசனத்தில் மணமக்கள் அமர்ந்திருக்க, அவருக்குக் கீழே தேவரடியாரான தம்பிரான் மாணிக்கத்துடன் இணைந்து குடும்பப்பெண்ணொருவரும் அமர்ந்திருக்கும் வழக்கமும் காணப்பட்டது.

மகாபாரத இதிகாசத்தில் வனத்தில் தவமிருந்த அருச்சுனனைத் தாக்கவந்த பன்றியைக் கொன்ற கதையானது, ஒரு சடங்காக திருக்கோணேச்சரத்தில் ஆற்றப்பட்டு வந்ததையும், அச்சடங்கு ஆற்றப்படுகையில் தேவரடியார்கள் பிரதான பங்கு வகித்ததையும் கோணேசர் கல்வெட்டின் உரைநடைப்பாகம் வழியாக அறிய முடிகின்றது.

*"தம்பிரான் மாணிக்கம் தன்னுடைய வரிசைப் பிரதாபமுடன் வந்து அலங்கிருதப்பூம்பந்தரின் கீழே நின்று பீதாம்பரப்பட்டுமுடுத்து, முத்துக்குச் சுத்தலைப்பாவுங்கட்டி, தங்க வீட்டியும் பட்டாடை சுற்றித் தன்றோளிலே வைத்துக்கொண்டு, ஆதியாகிய கோணேநாயகரையுமெழுந்தருளப்பண்ணி முன்னே போகப் பின்னே நடந்து திருச்சூகரம் நிற்குமிடத்துக்குப் போய், அவ்விடத்திலே ஆதியாகிய கோணநாயகர் அனேக திருவிளையாடல்கள் செய்தருளிய பின்னர்த் திருச்சூகரவேட்டையாடுகிறதற்குத் தம்பிரான் மாணிக்கம் சூகரத்துக்கெதிரேவர, இருபாகை முதன்மையுமீட்டியெடுத்துக் கொடுக்க, கனகசபைப் பண்டாரத்தார் ஈட்டி தொட்டுக் கொடுக்க, தம்பிரான் மாணிக்கம் பன்றிகுற்றுகிறது. அதன்பின்பு இராசமாணிக்கம் தனது அலங்கிருத வாட்சியத்தோடே கொண்டுபோய் விழா மண்டபத்தில் ஒப்பிவிக்கிறது.*

*வணிகரையடிக்கிறது வன்னிபமாணிக்கமும் செட்டிகள் மாணிக்கமும் வரிப்பத்தாரிற் பெரிய பிள்ளைப் பண்டாரத்தார் கிளையில் மனுஷரும் மஞ்சளரைத்துக் கரைத்துக் கிடாரங்களில் வைத்த காராளமாணிக்கம் அள்ளி வன்னிபத்துக்கும் இருபாகை முதன்மைக்கும் இராயருக்கும் பண்டாரத்தாருக்கும் மற்றும் போதுமான மனுஷருக்கும் உள்மண்டபத்தினின்றும் மஞ்சணீரூற்றிவிடுவது. மீகாமன் மாணிக்கமும் கம்மாளர் மாணிக்கமும் சகலருக்கும் மஞ்சணீரூற்றிவருவது."*

இதன்படி, திருச்சூகரவேட்டை என்னும் மேற்குறிப்பிட்ட சடங்கின் நிகழ்வுகள் பின்வரும் வரிசையில் இடம்பெற்றன:

- தம்பிரான் மாணிக்கம் அலங்கரிக்கப்பட்ட பூப்பந்தலின் கீழே நின்று பீதாம்பரத்தை அணிதல்.
- தம்பிரான் மாணிக்கம் தலைப்பா கட்டுதல்.
- தங்க ஈட்டிக்கு பட்டாடை சுற்றி தம்பிரான் மாணிக்கம் தனது தோளிலே வைத்தல்
- திருக்கோணேச்சரத்தின் உற்சவமூர்த்தி முன்னே போக தம்பிரான் மாணிக்கம் பின்னே நடந்து திருச்சூகரம் நிற்குமிடத்துக்குப் போதல்
- திருச்சூகரவேட்டையாடும் சடங்கை நிகழ்த்துவதற்கென தம்பிரான் மாணிக்கம் சூகரத்துக்கு எதிரே வருதல்
- தம்பிரான் மாணிக்கத்துக்கு இருபாகை முதன்மை ஈட்டி எடுத்துக் கொடுத்தல்
- கொடுக்கப்பட முன்னர் அந்த ஈட்டியை கனகசபைப் பண்டாரத்தார் தொட்டுக்கொடுத்தல்
- அந்த ஈட்டியை வாங்கி தம்பிரான் மாணிக்கம் சூகரம் எனப்படும் பன்றியுருவைக் குத்தல்
- பின்னர் இராசமாணிக்கம் அதனை விழா மண்டபத்தில் ஒப்புவித்தல்
- வன்னிமாணிக்கமும் செட்டிகள் மாணிக்கமும் பிறருடன் இணைந்து மஞ்சள் அரைத்து கரைத்து கிடாரங்களில் வைத்தல்
- அந்த மஞ்சள் நீரை உள் மண்டபத்தில் வைத்து பின்வருவோருக்கு காராள மாணிக்கம் அள்ளி ஊற்றல்
    - வன்னிபம்
    - இருபாகை முதன்மை
    - இராயர்
    - பண்டாரத்தார்
    - பிற மனிதர்கள்
- மீகாமன் மாணிக்கமும் கம்மாளர் மாணிக்கமும் அனைவருக்கும் மஞ்சள் நீரூற்றி விடல்.

இவ்வாறாக திருக்கோணேச்சரத்தின் பல்வேறு சடங்குகளிலும் தேவரடியார்களுக்கு முக்கிய பங்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஆய்வுத் தரவுகளின் மூலமான பெறுபேறுகள்**

- திருக்கோணேச்சரம் போர்த்துக்கேயர்களால் அழிக்கப்பட்ட பின்னர் அவ்வாலய விக்கிரகங்கள் திருகோணமலை நகரைச் சுற்றியுள்ள பல்வேறு இடங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டன. அவ்வாறு பிரதான விக்கிரகங்கள் மூலம் தம்பலகாமத்தில் ஸ்தாபிக்கப்பட்டதே ஆதிகோணநாயகர் ஆலயம் ஆகும். அக்கோயில் அமைக்கப்பட்ட பின்னர் அதனை நடத்துவிக்கின்ற ஒழுங்கு முறைகளை அறிதலுக்காக வேண்டி உருவாக்கப்பட்டதே, கோணேசர் கல்வெட்டு இலக்கியம் ஆகும். திருக்கோணேச்சர ஆலயம் போர்த்துக்கேயர் வசம் ஆகுவதற்கு முன்னர் அங்கு பேணப்பட்ட ஒழுங்குமுறைகளை வேறுபல நூல்கள் வழியாகவும் பிற மூலங்கள் ஊடாகவும் அறிந்து, அத்தரவுகளைக் கொண்டு எழுதப்பட்டதே கோணேசர் கல்வெட்டு ஆகும். இடம்பெயர்ந்து அமைக்கப்பட்ட கோயில் என்றவகையிலும், மன்னர்களால் அல்லாது மக்களால் ஆதரிக்கப்பட்ட கோயில் என்ற வகையிலும் தம்பலகாமம் ஆதி கோணநாயகர் ஆலயமானது, திருக்கோணேச்சரம் முன்னர் இருந்த வசதிகளுடனும் வளத்துடனும் இருந்திருக்காது. எனவே, ஆதிகோணநாயகர் ஆலயத்தின் ஒழுங்குமுறைகள் அதற்கமைந்த வளங்களுக்கு ஏற்பவே இருந்திருக்கும் எனலாம். இந்நிலையில், ஆதிகோணநாயகர் ஆலயத்தில் இருந்த ஒழுங்குமுறைகளை வழிப்படுத்தும் நோக்குடன் ஆக்கப்பட்ட கோணேசர் கல்வெட்டு ஆனது, அவ்வாலயத்தின் வளங்களைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய திருக்கோணேச்சர ஆலயத்தின் ஒழுங்குமுறைகளை மாத்திரமே காட்டியும் வெளிப்படுத்தியுமுள்ளது. இவ்விலக்கியத்தின் ஊடாக, திருக்கோணேச்சரத்தின் அனைத்து ஒழுங்கு விதிமுறைகளையும் அறிந்து கொள்ள முடியாது. இதனடிப்படையில், கோணேசர் கல்வெட்டில் தரப்பட்டுள்ள தேவரடியார் குறித்த தரவுகளை விடவும், உண்மையில் திருக்கோணேச்சரத்தில் அச்சமூகம் அதிகளவிலான பங்கைக் கொண்டிருந்திருக்கும் என்ற முடிவுக்கு வரமுடிகின்றது.
- தமிழகத்தின் தேவரடியார் முறைமைக்குள்ளே, அதிகாரப்படிநிலைகள் உள்ளதைப்போல, திருக்கோணேச்சர ஆலயத்தின் தேவரடியார் முறைமையிலும் அதிகாரப் படிநிலைகள் காணப்படுகின்றன. ஒரு தேவரடியார் ஆனவர் தனது கலை வெளிப்பாட்டுத் திறன்களை வைத்து அவ்வதிகார உயர்வுநிலைகளை அடைய முடியாமல், ஒழுங்கு விதிகள் தடுக்கின்றன.

- தமிழகத்தின் தேவரடியார் முறைமையில், தேவரடியார்களுக்கு உதவிநிற்கும் துணைச் சமூகங்கள் இருந்ததைப் போல், திருக்கோணேச்சர ஆலயத்தின் தேவரடியார் பணிகளுக்குத் துணை செய்வதற்கான துணைச் சமூகங்கள் இருந்துள்ளன. குளக்கோட்டனால் மேற்கொள்ளப்பட்ட இரண்டாம் குடியேற்றத்தில் கொண்டுவரப்பட்ட வரிப்பத்தார் வகைப்பாட்டுக் குடியேற்ற வாசிகளில் சிலர், தேவரடியார் ஆடும் போதும் வாத்தியங்களை இசைத்தல் வாய்ப்பாட்டைப் பாடல் முதலான பணிகளை ஆற்றியமை மூலம் இதனை அறிய முடிகின்றது.
- தேவரடியாரை உள்ளடக்கிய தானத்தார் குழுமத்திற்கும் அவர்களுக்கு துணைசெய்யும் குடிகள் அடங்கிய வரிப்பத்தார் குழுமத்திற்கும் இடையில் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இப் பிரச்சினைகளை கவனமாக தீர்த்துவைக்கும் பொருட்டாகவே மதுரையிலிருந்து தனியுண்ணாப் பூபாலன் அழைத்து வரப்படுகின்றான். இச் சூழ்நிலையில், தேவரடியாருக்கும் கோயிற் சேவையிலிருந்த பிற குடிகளுக்கும் சுமூகமான உறவு இருக்கவில்லை என்பது புலனாகின்றது.
- திருகோணமலை நகரை நிர்வகிப்பதற்காக அழைத்துவரப்பட்ட தனியுண்ணாப் பூபாலனுக்கு, தண்டனை விதித்தல் குறித்து விடுக்கப்பட்ட அறிவுறுத்தலின்படி குற்றம் செய்த பெண்களை, தேவரடியார் எனவும் தேவரடியார் அல்லாதார் எனவும் பிரித்து நோக்கி தண்டிக்கும் வழக்கு அக்காலத்தில் இருந்துள்ளமை தெரிய வருகின்றது. குற்றமிழைத்த தேவரடியார்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை, பிறிதொருவரால் அவர்கள் தாக்கப்படும் செயற்பாடாக அமையவில்லை. ஆனால், பிற பெண்களுக்கு வழங்கப்பட்ட தண்டனையில், அவர்கள் பிறிதொருவர் மூலம் தாக்கப்பட்டுள்ளனர்.
- திருகோணமலை நகரை நிர்வகிக்கும் வன்னிமை பதவியிலிருந்த தனியுண்ணாப் பூபாலனுக்கு வழங்கப்பட்ட மற்றொரு அறிவுறுத்தலானது, அவனை தன் மனைவியை மட்டுமே தாரமாக கருதும்படி வலியுறுத்துகின்ற அதேவேளை மற்றவர்களது தாரத்தை அவன் தனது தாய் என்ற ஸ்தானத்தில் வைத்தே அணுக வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. இங்கே, மற்றவர்களது தாரம் என்பதனூடாக குடும்பப் பெண்களுக்கு வழங்கப்பட்ட இத்தகு பாதுகாப்பு, தேவரடியார்களுக்கு இல்லை என்பது புலனாகின்றது. தனியுண்ணாப் பூபாலனின் நிர்வாகத்தின் கீழ்வருபவர்களான தேவரடியார்கள் அவனை அனுசரித்தே வாழவேண்டிய நிலையில் இருந்தார்கள்.
- தேவரடியார்களது இந்த நிலை, அக்கால சமூகத்தால் தவறானதாக கருதப்படவில்லை. அதிகாரத்தில் இருப்பவர் ஒருவர் தனது ஆளுகையின் கீழ் உள்ள குடும்பப்பெண்ணை தனது பாலியல் இச்சையைத் தீர்த்துக்கொள்வதற்கு வற்புறுத்துவதே, அச்சமூகத்தில் தவறான செயலாக கருதப்பட்டது.
- கோயிலுக்கு ஒரு பெண் தன்னை தானே தேவரடியார் ஆக அர்ப்பணிப்பதைப் போல, ஒரு பெண்ணை கோயிலுக்கு தானமளிப்பதன் மூலம் தேவரடியார் ஆக்கும் முறையும் தமிழகத்தில் இருந்தது. திருக்கோணேச்சரத்திலும் அம்முறை பின்பற்றப்பட்டுள்ளமையை கோணேசர் கல்வெட்டின் உரைநடைப் பாகத்தில் அவதானிக்கலாம். மேலும் திருக்கோணேச்சர ஆலயத்திற்கு அவர்கள் தேவரடியாராக அளிக்கப்பட்ட போதும், அவர்களை ஆதரிக்கும் பொறுப்பை அக்கோயில் நேரடியாக ஏற்கவில்லை. அப்பொறுப்பு குறித்த சில குடிகளுக்கு மட்டும் அளிக்கப்பட்டதுடன், அத்தேவரடியாரும் அவர்கள் சந்ததியும் தம்மை ஆதரிக்கும் குடியின் பெயரால் அழைக்கப்பட்டனர். தனது கோயிற்பணி செய்த தேவரடியாரை திருக்கோணேச்சரம் நேரடியாக ஆதரிக்கவில்லை என்ற விடயத்தில், தமிழக தேவரடியார் முறைமையில் இருந்து, திருக்கோணேச்சர தேவரடியார் முறைமை மாறுபட்டுக் காணப்படுகின்றது.
- திருக்கோணேச்சரத்தின் கோயிற்பணியாளர்கள், அக்கோயிலின் நிர்வாகிகளின் குடும்பப் பணிகளுக்கும் பயன்படுத்தபட்டுள்ளனர். இப்பணிகளில் முக்கியமானவையாக “கலியாணத்துக்குச் செய்தொழும்பு” மற்றும் “தீமைக்குச் செய்தொழும்பும்” காணப்பட்டன. தீமைக்குச் செய்தொழும்பு என்பது மரணம் நிகழ்ந்த வீட்டில் செய்யப்படும் பணியைக் குறிக்கின்றது. கோயிற் பணியாளர்களில் தேவரடியாரே கலியாணத்துக்குச் செய்தொழும்பில் முன்னிலையும் பெரும் பங்கும் வகித்தனர். எனினும், தீமைக்குச் செய்தொழும்பில் அவர்கள் எப்பங்கையும் ஆற்றவில்லை. இதன்மூலம், அக்காலத்தைய சமூகத்தில் தேவரடியார்கள் மங்கல அம்சம் உடையவர்களாக கருதப்பட்டமையும் அவர்கள் மங்கல நிகழ்ச்சிகளுக்கு மட்டுமே பங்காற்ற அழைக்கப்பட்டமையும் புலனாகின்றது.கலியாணச் சடங்குகளில் செய்தொழும்பு வகைப்பாட்டின் கீழ்வரும் பணிகளை ஆற்றுவதில் பெரும்பங்கும் முன்னிலையும் தம்பிரான் மாணிக்கம் எனும் தேவரடியாருக்கே இருந்தது. அதற்கு அடுத்த நிலையிலேயே இராசமாணிக்கம் எனும் தேவரடியாருக்கு அந்தஸ்து அளிக்கப்பட்டது.

- மேற்குறிப்பிடப்பட்ட திருமணச் சடங்கின் பிரதானமான சடங்குகள் நிறைவடைந்ததன் பின்னர், மணமகனும் மணமகளும் மணவறை ஆசனத்தில் சபைக்கு முன்பு அமர்ந்திருக்கும் போது, அவர்களின் கீழே சபை முன்பாக தனது அலங்காரத்துடன் அமரும் வாய்ப்பு குடும்பப் பெண் ஒருவருக்கு வழங்கப்பட்டது. மேலும் சமநிலை அந்தஸ்துடன் அப்பெண் அவ்விடத்தில் அலங்காரத்துடன் அமரவும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

திருக்கோணேச்சரத்தில் நிகழ்ந்ததான திருச்சூகர வேட்டை அல்லது பன்றிகுற்றல் என்று அழைக்கப்பட்ட வேட்டைத் திருவிழாவில், அதிமுக்கிய பங்கு தேவரடியார்களால் ஆற்றப்பட்டமையும் பிறிதொரு திருவிழாவையும் குறிப்பாக சுட்டி உரைக்காத கோணேசர் கல்வெட்டு, இவ்விழாவுக்கு முக்கியத்துவம் வழங்குவதையும் கவனமாக நோக்க வேண்டியுள்ளது. இதன் மூலம், திருக்கோணேச்சரத்தின் கோயிற்சடங்குகளில் தேவரடியார்களின் பொறுப்பும் அதிகாரமும் அந்தஸ்தும் மிகவும் உயர் நிலையில் இருந்தமையை அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

**முடிவுரை**

திருக்கோணேச்சர ஆலயத்தின் சேவைக்காக தமிழகத்திலிருந்து ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்ட தேவரடியார்கள், அக்கோயிலின் பொறுப்பு மற்றும் அதிகாரத்தில் உயர்நிலையை அனுபவித்ததுடன், அவர்கள் சமூகத்தால் மிகச்சிறப்பாக ஆதரிக்கப்பட்டனர். அதேவேளை, அத் தேவரடியார்களுக்கு உள்ளான ஏற்றத் தாழ்வுகளையும் அவர்களுடன் தமிழகத்திலிருந்து வந்த பிற குடிகளுடனான முரண்பாடுகளையும் அவதானிக்க முடிகின்றது. பல்வேறு உயர்நிலைகளை அனுபவித்த போதும் தேவரடியார்கள் தமக்கு மேல்நிலையிலிருந்த அதிகார வர்க்கத்தினரின் பாலியல் இச்சையை அனுசரித்துப் போகவேண்டிய நிலமையும் காணப்பட்டுள்ளது. கோணேசர் கல்வெட்டின் தரவுகளுடன் திருக்கோணேச்சரம் குறித்த பிற வரலாற்று மூலங்களின் தரவுகளும் இணைத்து அவற்றினைக் கொண்டு தேவரடியார்களின் நிலை ஆராயப்படுமிடத்து, இவ்வாய்வு இடைவெளி மேலும் செம்மையாக நிரப்பப்பட முடியும்.

## References


1.Kannan,R.(2019).Colonial Material Collections and Representations of Devadasi Bodies in the Public Sphere in the Early 20th-Century South India. *Anthropos* 114, (2) 531–545 https://doi.org/10.5771/0257-9774-2019-2-531

2.Maheswaran, V.(2011). Uruthra Kanikaiyar.Colombo, Sri Lanka: Department of Hindu Community Cultural Affairs.

3.Rudisill, K. (2013). [Review of the book Unfinished Gestures: Devadasis, Memory, and Modernity in South India, by Davesh Soneji]. *Asian Theatre Journal* 30(1), 239-241. https://doi:10.1353/atj.2013.0003.

4.Santhini,P.(2022), Kalveṭṭil Tēvatāci. Germaṉi: Tamiḻ Marapu Aaṟakkaṭṭaḷai.

5.Shankar, S., Ganesan, P. (2021). The Devadasis, Dance Community of South India: A Legal and Social Outlook. *International Journal on Minority and Group Rights* 29 (1),102-140. https://doi.org/10.1163/15718115-bja10052

6.Singhal, A. (2015). The Devadasi System: Temple Prostitution in India. *UCLA Women's Law Journal* 22(1) 107-112.

7.Sivasamy, V.(1988) Bharatakala. Jaffna, Sri Lanka: New Era Publications Limited.

8.Soneji, D. (2010). Śiva's Courtesans: Religion, Rhetoric, and Self-Representation in Early Twentieth-Century Writing by devadāsīs. *Hindu Studies* 14, 31–70. https://doi.org/10.1007/s11407-010-9085-0

9.Soneji, D. (2012). Unfinished Gestures - Devadasis, Memory and Modernity in South India. Chicago, USA: University of Chicago.

10.Vadivel, E. (1993), Konesar Inscription. Colombo, Sri Lanka: Department of Hindu Cultural Affairs.

11.Veṇṇilā, A., (2018), Tēvaraṭiyār kalaiyē vāḻvāka. Vantavāci, India: Akani Veḷiyīṭu.